# திருவள்ளூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், திருவள்ளூர்

*****

நாள்: 22.04.2026

**அறிவிப்பு**

**சட்டம் சார்ந்த தன்னார்வலராக**
**பணியாற்ற விண்ணப்பங்கள் வரவேற்க்கப்படுகின்றன**

திருவள்ளூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் பூந்தமல்லி, பொன்னேரி, திருத்தணி, அம்பத்தூர், திருவெற்றியூர், ஊத்துக்கோட்டை, பள்ளிப்பட்டு, மாதவரம் மற்றும் கும்மிடிப்பூண்டி ஆகிய ஊர்களில் இயங்கும் வட்ட சட்டப்பணிகள் குழுவிற்கு சட்டம் சார்ந்த தன்னார்வலராக சேவை புரிய மற்றும் காவல் நிலையங்களில் காணாமல் போன குழந்தைகள் குறித்து புகார் செய்ய வரும் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுக்கு தகுந்த சட்டஉதவி பெற்றுத்தர கீழே குறிப்பிட்டுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

- ஆசிரியர்கள் (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உட்பட)
- ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மூத்தகுடிமக்கள்
- சமூகப் பணியில் முதுநிலைக் கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்
- அங்கன்வாடிப் பணியாளர்கள்
- மருத்துவர்கள் / உடல் நல நிபுணர்கள்
- மாணவர்கள் மற்றும் சட்டக்கல்லூரி மாணவர்கள் (அவர்கள் வழக்கறிஞராகப் பதிவுசெய்யும் வரை)
- அரசியல் சார்பற்ற அரசு சாரா சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் சங்கப் பிரமுகர்கள்
- மகளீர் குழுக்கள், மைத்ரிசங்கங்கள் மற்றும் வரியோரை உள்ளடக்கிய சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள்
- மாவட்ட / வட்ட சட்டப்பணிகள் தன்னார்வ சட்டப்பணியாளர்கள் பணிக்கு பெருத்தமாக கருதும் நபர்

| | | |
|---|---|---|
| 1 | இதர தகுதிகள் | சட்டம் சார்ந்த தன்னார்வலர்கள் இரக்கம், ஏனையவரின் உணர்வுகள் புரிந்து கொள்ளும் தன்மை, கலப்படமற்ற தூய்மை ஆகிய அடிப்படை மனித குணங்களின் மீது ஒன்றி இருத்தல், எவ்வித பணப் பயனும் எதிர் பார்க்காமல் தன்னார்வ சேவை புரிதல், தங்கள் பணிகளில் இருந்து வருமானத்தை எதிர் நோக்காதவர்களாகவும், ஆனால் சமூகத்தின் பலவீனமான பிரிவினர், வறியவர் ஆகியோரை மேலுயர்துவதற்கான உறுதியும், உணரும் திறனும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். |
| 2. | கல்வி | 12ஆம் வகுப்பு தேர்ச்சி |
| 3. | வயது | 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும் |
| 4. | மதிப்பூதியம் | காவல் நிலையம் செல்லும் நாள் ஒன்றுக்கு ரூபாய் 1000/- அதிகபட்சமாக ஒரு வழக்கிற்கு ரூபாய் 5000/- மட்டும் மதிப்பூதியமாக வழங்கப்படும். |
| 5. | **விண்ணப்பிக்க கடைசி நாள்** | **08.05.2026 மாலை 05.30 மணிக்குள்** |

திருவள்ளூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவில், பூந்தமல்லி வட்டச் சட்டப்பணிகள் குழுவில், பொன்னேரி வட்டச் சட்டப்பணிகள் குழுவில், திருத்தணி வட்டச் சட்டப்பணிகள் குழுவில், அம்பத்தூர் வட்டச் சட்டப்பணிகள் குழுவில், திருவெற்றியூர் வட்டச் சட்டப்பணிகள் குழுவில், ஊத்தூக்கோட்டை வட்டச் சட்டப்பணிகள் குழுவில், பள்ளிப்பட்டு வட்டச் சட்டப்பணிகள் குழுவில், மாதவரம் வட்டச் சட்டப்பணிகள் குழுவில் மற்றும் கும்மிடிப்பூண்டி வட்டச் சட்டப்பணிகள் குழுவில் சேர்த்து 30 முதல் 40 வரை நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். **விருப்பமுள்ளவர்கள் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ நிரப்பி பதிவு தபாலில் கீழே கண்ட முகவரிக்கு 08.05.2026 அன்று மாலை 05.30 மணிக்குள் அல்லது அதற்கு முன்பாக கிடைக்கப் பெறுமாறு அனுப்பக் கோரப்படுகிறது. 08.05.2026 மாலை 05.30 மணிக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**

முகவரி:

செயலாளர்,

திருவள்ளூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,

மாற்றுமுறை தீர்வு மையம்,

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், திருவள்ளூர் - 602 001.

மேற்படி சட்டம் சார்ந்த தன்னார்வலர்களுக்கு கடமை சேவை மட்டுமே உத்தியோகம் இல்லை. தற்காலிகமானது மற்றும் அதற்கு ஊதியம் எதுவும் இல்லை சேவைக்கு தகுந்த மதிப்பூதியம் மட்டுமே அளிக்கப்படும் என்பது தெரிவிக்கப்படுகிறது.

நேர்காணல் தேதி மற்றும் இடம் விண்ணப்பதாரருக்கு தொலைபேசி அழைப்பு மூலமாகவோ அல்லது குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ தெரிவிக்கப்படும். மற்ற விவரங்களுக்கு திருவள்ளூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு அலுவலகத்தையோ அல்லது அருகில் உள்ள வட்ட சட்டப்பணிகள் குழுவையோ அணுகவும்.

விண்ணப்பத்தினை திருவள்ளூர் மாவட்ட நீதிமன்றத்தின் பின்வரும் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

https://tiruvallur.dcourts.gov.in/

இப்படிக்கு,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
திருவள்ளூர்

# திருவள்ளூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு

## சட்டம் சார்ந்த தன்னார்வலர்கள் சேர்க்கை – 2026

பாஸ்போர்ட் சைஸ் பாட்டோ ஒட்ட வேண்டும்

Passport size photograph to be affixed

| | | |
|---|---|---|
| 1. | பெயர் (பெரிய எழுத்துக்களில்)<br>Name (In Capital Letter) | |
| 2. | பாலினம் / Sex | ஆண் / பெண் / திருநங்கை<br>(Male / Female / Transgender) |
| 3. | வயது / Age | |
| 4. | தகப்பனார் / கணவர் பெயர்<br>Father's / Husband Name | |
| 5. | கல்வி தகுதிகள்<br>Education Qualifications | |
| 6. | தொழில் சார்ந்த கல்வி தகுதிகள்<br>Technical Education Qualifications | |
| 7. | சாதி மற்றும் பிரிவு<br>Community / Caste | |
| 8. | மதம் / Religion | |
| 9. | அலுவலக விலாசம் / Office Address | |
| 10. | வசிப்பிட விலாசம்<br>Residential Address | |
| 11. | தொழில் / Occupation | |
| 12. | தொலைபேசி எண் / Telephone No. | |
| 13. | கைப்பேசி எண் / Mobile No.<br>***(கட்டாயம்)** | |
| 14. | மின்னஞ்சல் முகவரி<br>E-mail Address. | |

| | | | |
|---|---|---|---|
| 15. | எப்பகுதியில் சட்டம் சார்ந்த தன்னார்வலராக சேவை செய்ய விரும்புகிறீர்கள்:<br><br>Place in which willing to work as Para Legal Volunteer<br><br>மார்க் செய்யவும் / Tick in the appropriate Column | திருவள்ளூர்/ Tiruvallur | |
| | | பூந்தமல்லி/ Poonamallee | |
| | | பொன்னேரி/ Ponneri | |
| | | திருத்தணி/ Tiruttani | |
| | | அம்பத்தூர்/ Ambattur | |
| | | திருவொற்றியூர்/ Tiruvotiyur | |
| | | ஊத்துக்கோட்டை/ Uthukottai | |
| | | பள்ளிப்பட்டு/ Pallipattu | |
| | | மாதவரம்/ Madhavaram | |
| | | கும்மிடிப்பூண்டி/ Gummidipoondi | |
| 16. | தாங்கள் ஏற்கனவே சட்டம் சார்ந்த தன்னார்வலராக பணிபரிந்திருந்தால் விவரம் மற்றும் செய்த பணிகள் குறித்து தெரிவிக்கவும்<br>Whether you have already worked as Para Legal Volunteer? If so, details or Service rendered to be stated | | |
| 17. | குற்ற வழக்குகளில் ஏதேனில் நீவிர் சம்மந்தப்பட்டவராக இருந்தால், அதன் விவரம் | | |
| 18. | மேலும் தாங்கள் தெரிவிக்கும் தகவல்கள்<br>Other Information’s, if any | | |

நாள் / Date:

இடம் / Place:

விண்ணப்பதாரரின் கையெழுத்து
Signature of the Applicant

குறிப்பு: சட்டம் சார்ந்த தன்னார்வலர் பணி நிரந்தர பணி அல்ல. தற்காலிகமானது மற்றும் அதற்கு ஊதியம் எதுவும் கிடையாது, சேவைக்கு தகுந்த மதிப்பூதியம் மட்டுமே அளிக்கப்படும். பணி நிரந்தரம் செய்ய உரிமை எதுவும் நான் கோர முடியாது என்பதை நான் அறிந்துக் கொண்டேன்.

விண்ணப்பதாரரின் கையெழுத்து
Signature of the Applicant